ශ්‍රී ලංකා බාලදක්ෂ සංගමය
இலங்கைச் சாரணர் சங்கம்
Sri Lanka Scout Association
Incorporated by Act No.13 of 1957
Reg.by Boy Scout International Bureau on -22.02.1953

2026.06.16 *சுற்றறிருப இல 51/2026*

சகல மாவட்ட ஆணையாளர்களுக்கும்,

ஐயா /அம்மணி,

## தேசிய சாரணர் இளைஞர் ஊடக குழுக்களுக்கான விண்ணப்பம் கோரள்

இலங்கை சாரணர் சங்கத்தின் ஊடாக தேசிய சாரணர் ஊடக குழவை உருவாக்குவதற்கான விண்ணம் கோரப்படுகின்றது.

இந்நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கமானது தேசிய மட்டத்தில் சாரணர் செயற்பாடுகளை ஊக்குவிப்பதில் ஆர்வத்தை உருவாக்குவதாகும். நவீன ஊடகங்களைப் பயண்படுத்தி,படைப்பாற்றலும் அர்ப்பணிப்பும் செயற்படுகின்ற சிரேஷ்ட சாரணர்கள் மற்றும் திரிசாரணர்களை ஒன்றினைத்து புதிய ஊடக நுட்பமுறைகளை பாவித்து சாரணர் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும்,சாரணர் அமைப்பின் பிம்பத்தை உயர்த்தவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட இளைஞர் ஊடகக் குழுக்களை நிருவுவதாகும்.

### உறுப்பினர்களுக்காக கிடைக்கும் பிரத்தியேக சலுகைகள்.

- தேசிய மற்றும் சர்வதேச அளவில் சாரணர் பாசறை, ஜம்போறி மற்றும் பல்வேறு செயற்பாடுகளில் ஊடக குழு என பங்களிப்பு செய்தல்.
- நிபுணத்துவம் வாய்ந்த பத்திரிகையாளர்கள்,தகவல் தொடர்பு வல்லுநர்கள், மற்றும் தொழில் முறை வல்லுநனர்களின் வழிகாட்டலின் கீழ் பயிற்சி மற்றும் அறிவு மேம்பாட்டுக்கான வாய்ப்புகள்.
- தங்களின் அர்ப்பணிப்பு மற்றும் சேவைப் பங்களிப்புகளுக்காக, சிறப்பு விருதுகள் மற்றும் அங்கிகார முறையின் கீழ் வருடாந்த மதிப்பீடுகளை நடாத்துதல்.
- உங்களாளல் வழங்கப்படுகின்ற சேவைகளின் அடிப்படையில் அதிகாரப்பூர்வ சேவைச்சான்றிதழ்களைப் பெறும் திறன்.
- ஊடகத் தொடர்பில் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்கத்தில் உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்வது மற்றும் தொழில் முறை வலையமைப்பு வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.

இந்த சலுகைகள் ஊடாக தங்களின் ஊடகத் தொடர்புகளை வளர்த்துக்கொள்வதுடன் இலங்கை சாரணர் சங்கத்தின் ஊடக பிரிவு உங்களை கௌரவத்துடன் வரவேற்றுக்கொள்கின்றது.

### தெரிவி செயப்படுகின்ற உறுப்பினர்களின் பொறுப்புக்கள்.

- தேசிய சாரணர் விழாக்கள் மற்றும் செயற்பாடுகளை உள்வாங்குதல்
- உயர்தர புகைப்பட வீடியோக்களை உருவாக்குதல் வரைகளைகளை உருவாக்கதல்
- அதிகாரப்பூர்வ ஊடக வலையமைப்பின் மூலம் முகாமைத்துவதிற்கு பங்களிப்பு செய்தல்.
- டிஜிடல் வலையமைப்பின் ஊடாக சாரணர் செயற்பாடுகளை விருத்தி செய்தல்.
- ஊடக மேம்பாட்டுக்காக ஆக்கபூர்வமான யோசனைகளை வழங்குதல்.

### தகைமைகள்

விண்ணப்பதாரர்கள்

- இலங்கை சாரணர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சிரேஷ்ட சாரணர் அல்லது திரிசாரணர்
- தேவையான நேரத்தில் தமது சேவையை வழங்கக் கூடியவராக இருத்தல்
- ஊடகத் தொடர்பு மற்றும் உள்ளக உருவாக்கத்தில் ( content creation)ஆர்வம் கொண்டிரத்தல்
- படைப்பாற்றல் மிக்கவராகவும்,குழு மனப்பான்மை கொண்டவராகவும், பொறுப்புணர்வு,கடமை உணர்வு, அற்றும் அர்ப்பணிப்பு கொண்டிரத்தல்
- தேசிய மட்டத்தில் தொண்டர் அடிப்படையில் சேவைசெய்யக் கூடியவராக இருத்தல்

**தேவையான திறமைகள்**

- புகைப்படபிடிப்பாளர் (Photography)
- வீடியோ செய்யக்கூடியவர் ( Videography)
- வீடியோ எடிட்டிங் (Video Editing)
- பெக்ஸ் வடிவமைப்பு ( தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்)
- சமூக ஊடக வடிவமைப்பாளர்
- உள்ளடக்கத்தை உருவாக்குதல் (content writing) (தமிழ் / சிங்கள் / ஆங்கிலம்)
- அறிவிப்பு மற்றும் விளக்கக்காட்சி திறன் (தமிழ் / சிங்கள் / ஆங்கிலம்)
- டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு ( Analytics)
- நேரடி விழாக்களை தயார்படுத்தல்
- றொன் இயக்குதல்
- ஊடக இணைப்பு

**விண்ணப்பிக்கும் முறை**

விருப்பமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பத்துடன் பொருத்தமான கலைப்படைப்பக்களை (Portfolio) அனுபவம் இருப்பின் முன்வைக்குக.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2026 ஜுலை 10


விண்ணப்பிக்க வேண்டிய முறை https://forms.gle/A7s3UfeFJNCPbuYW6

தெரிவு செய்யும் முறை

நேர்முகப் பரீட்சை எதிர்காலத்தில் நடைபெறும். விண்ணப்பதரர்களிடமிருந்து அதிகமாக தகைமைகளை கொண்டோர் தெரிவு செய்யப்பட்டு தேசி ஊடக குழு அமைக்கப்படும்.
ஊடகம் மற்றும் படைப்பாற்றல் ஊடாக சாரணர் இமைப்பினை பலப்படுத்த தங்களின் உயரஜய பங்களிப்பை எதிர்பாரக்கின்றோம்.

நன்றி,
இங்ஙனம்,
சாரணர் பணியில்

’.



ஸ்ரீ பிரபாத் குலரத்ன
உதவி பிரதம ஆணையாளர்
(ஊடகம்/ மக்கள் தொடரபாடல்)

***Sgd/***
சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார
பிரதம ஆணையாளர்

**பிரதி:-** தலைமையகத்தின் சகல ஆணையாளர்கள்.
தலைவர், நிறைவேற்றுக்குழு தவிசாளர்,செயலாளர், பொருளாலர், இலங்கை சாரணர் சங்கம்.
அலுவலக கொவை